தெரு, சைதாப்பேட்டை, ஆரணி. (3) பா.நவீன்குமார், 32/72, மோகனன் தெரு, ஆரணிப்பாளையம், ஆரணி. (4) வி.மகேஷ்குமார், 1, பள்ளிகூடத்தெரு, சைதாப்பேட்டை, ஆரணி. (5) கு.நாகராஜ், 31, அம்பேத்கர் நகர், ஆரணி. (6) சையத் அல்தாப், 23, தாவுத் தெரு, ஆரணி.

## வந்தவாசி நகரம்

**அமைப்பாளர் :** மு.சுரேஷ்குமார், 4–சி/20, கஸ்தூரிபாய் தெரு, வந்தவாசி.

**துணை அமைப்பாளர்கள் :** (1) த.லோகநாதன், 77, காமராஜர் தெரு, வந்தவாசி. (2) ச.மணிகண்டன், 48, கோட்டை பழைய காலனி, வந்தவாசி. (3) ஐ.அப்துல் பாசித், 3/1, கலாய்கார தெரு, வந்தவாசி. (4) சி.அருண்முருகன், 75, பெட்டி நாயுடு தெரு, வந்தவாசி. (5) அப்துல் ஜப்பார், 33, காயிதேமில்லத் நகர், வந்தவாசி.

## செய்யாறு நகரம்

**அமைப்பாளர் :** ச.துரைசாமி, 9, பொன்னியம்மன் கோயில் தெரு, செய்யாறு.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இ.பாபுலால், 10/80, காமராஜர் நகர் செய்யாறு. (2) ம.ராம்ஜி அம்பேத்கர், 49–ஏ, இளங்கோ தெரு, விரிவுப் பகுதி, செய்யாறு. (3) பா.பாரதி, 6, அறிஞர் அண்ணா நகர், கொட நகர் செய்யாறு. (4) வெ.அண்ணாமலை, 119/18–சி, காந்தி சாலை, செய்யாறு. (5) த.அருண், 27/14, பழைய மசூதி தெரு, செய்யாறு.

## போளூர் பேரூர்

**அமைப்பாளர் :** ச.பரணிதரன், 30/டி, கோவிந்தசாமி தெரு, போளூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) க.மணிகண்டன், 25, ஈஸ்வரன் கோயில் தெரு, அல்லி நகர், போளூர். (2) கோ.விக்னேஷ், 18, சேர்மன் சபாபதி தெரு, போளூர். (3) செ.சிவசங்கர், 34, ராஜாஜி தெரு, அல்லி நகர், போளூர். (4) சோ.தினேஷ், 5/2, வசந்தம் நகர், பெரியார் தெரு, போளூர். (5) க.தியாகராஜன், 31, நேரு தெரு, போளூர். (6) ரா.கார்த்திக், 5, ரங்கன் தெரு, போளூர்.

## சேத்துப்பட்டு பேரூர்

**அமைப்பாளர் :** கு.பாரதிதாசன், 90–பி, மாரியம்மன் கோயில் தெரு, சேத்துப்பட்டு.

**துணை அமைப்பாளர்கள் :** (1) ர.கதிரவன், 12/ஏ, கம்பர் தெரு, கண்ணணூர், சேத்துப்பட்டு. (2) ஜோ.சபரி, 26, நேரு தெரு, பழம்பேட்டை, சேத்துப்பட்டு. (3) சூ.ஏசுமுத்து, 36. சவரியார் தெரு, சேத்துப்பட்டு. (4) ர.வினோத்குமார், 10, பெரியார் தெரு, போளூர் சாலை, சேத்துப்பட்டு. (5) ச.ஆனந்த், மேஸ்திரி தெரு, பாளையம், சேத்துப்பட்டு.

## கண்ணமங்கலம் பேரூர்

**அமைப்பாளர் :** த.குமார் (எ) குமரன், 36, இராமகிருஷ்ணா உடையார் தெரு, கண்ணமங்கலம்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) கோ.சரவணன், 29, பிள்ளையார் கோயில் தெரு, கண்ணமங்கலம். (2) கோ.சரத்குமார், 3/8 புதிய காலனி, கண்ணமங்கலம். (3) அ.முஹமது பரீஹான், பெண் பாடசாலைத் தெரு, கண்ணமங்கலம்.

## களம்பூர் பேரூர்

**அமைப்பாளர் :** ஜெ.ஷியாம்குமார், 49, தருமராஜா கோயில் தெரு, போளூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) அ.சத்தியராஜ், 180/13 டாக்டர் அம்பேத்கர் நகர், களம்பூர், போளூர். (2) பு.தரணி, 14–சி, அன்னை கஸ்தூரிபாய் தெரு, களம்பூர். (3) பா.அண்ணாமலை, 3, பெருமாள் கோயில் தெரு, களம்பூர்.

## பெரணமல்லூர் பேரூர்

**அமைப்பாளர் :** செ.சதீஷ், 54, வன்னியர் தெரு, பெரணமல்லூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) மு.உதயகுமார், 36, மேல் யாதவர் தெரு, பெரணமல்லூர். (2) அ.லோகேஷ், தருமராஜன் கோயில் தெரு, பெரணமல்லலூர். (3) வ.பவுன்ராஜ், 19, தெற்குத் தெரு, பெரணமல்லூர்.

## தேசூர் பேரூர்

**அமைப்பாளர் :** ம.தியாகு, 1, விஸ்வ பிராமணர் தெரு, தேசூர்.

**துணை அமைப்பாளர்கள் :** (1) இ.சையத் சாதிக், 4\2 தெள்ளார் மழையூர் சாலை, தேசூர். (2) சே.திருஞானம், 16, மாரியம்மன் கோயில் தெரு, பெலகாம்பூண்டி, தேசூர். (3) மு.அப்துல் ரஹ்மான், 82/44, தெள்ளார் மழையூர் சாலை, தேசூர்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 23–01–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி

---

**தலைமை : சி.வேலுச்சாமி! - வரவேற்புரை: ஜி.குகன்!**

# திருப்பூர் தெற்கு மாவட்டத்தில் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

### இரா.ராஜீவ் காந்தி - மு.பெ.சாமிநாதன் - என்.கயல்விழி செல்வராஜ் - இல.பத்மநாபன் - சேலம் கோவிந்தன் - கே.ஈஸ்வரசாமி சிறப்புரை!

திருப்பூர், ஜன. 24-

திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலைப்பேட்டை நகர தி.மு.க. மற்றும் மாணவரணி சார்பில் மொழிப் போர்த் தியாகிகளின் நினைவினை போற்றும் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் நாளை (25.01.2025 - சனிக்கிழமை) மாலை 06.00 மணியளவில் உடுமலைப்பேட்டை தாராபுரம் ரோடு தாஜ் திடலில் உடுமலை நகர கழக செயலாளர் சி.வேலுச்சாமி தலைமையில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ஜி.குகன் வரவேற்புரையில் பொதுக்குழு உறுப்பினர் யு.என்.பி.குமார், நகர அவைத் தலைவர் சொர்க்கம் எம்.பழனிச்சாமி, துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர் எஸ்.செந்தில்குமார், சி.செந்தில்குமார், கே.ரேணுகா, பொருளாளர் யு.கே.அப்பாசாமி, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்கள் ஆதித்யா பி.அருள், ஜி.சிவராஜ், என்.சுமித்ரா ராணி, எஸ்.சிலம்பரசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கழக மாணவரணி தலைவர் இரா.ராஜீவ் காந்தி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ், திருப்பூர் தெற்கு மாவட்ட கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தலைமைக் கழக பேச்சாளர் சேலம் கோவிந்தன், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி ஆகியோர் வீர வணக்க உரையாற்றவுள்ளார்.

இதில் மாவட்ட அவைத் தலைவர், மடத்துக்குளம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் இரா.ஜெயராமகிருஷ்ணன், மாவட்ட துணைச் செயலாளர்கள் ராசி கே.ஆர்.முத்துக்குமார், டி.சக்திவேல், தாராபுரம் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் பிரபாவதி பெரியசாமி, மாவட்டப் பொருளாளர் கே.எம்.முபாரக் அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எஸ்.தனசேகர், சி.சியாம் பிரசாத், வி.மகாலிங்கம், தலைமை கழக பேச்சாளர் தாரை சிவா, பொதுக்குழு உறுப்பினர்கள் ராமசாமி, எம்.ஆர். பாபு, எம்.பருவதவர்த்தினி, ஆர்.சிவக்குமார் எ.கே. கார்த்திகேயன், கே.எஸ்.கருணாகரன், சா.மெய்யப்பன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பமார் மு. ஜெயக்குமார், உடுமலை ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் மகாலட்சுமி முருகன், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை தென்றல் சேகர், மாவட்ட பிரதிநிதிகள் எஸ். சிராஜ்தீன், எ.சிவக்குமார், எஸ்.வஞ்சிகுமார், டி. ஆரோக்கியசாமி, யூ.எ.கருணாகரன் உள்பட மாநில, மாவட்ட, நகர கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கூட்டத்தின் இறுதியில் நகர மாணவர் அணி அமைப்பாளர் கே. ஆதம் ஒலி நன்றியுரையாற்றுகிறார்.

---

**எம்.அப்துல்மாலிக் வரவேற்புரை!**

# செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் தி.மு.க. பி.எல்.ஏ.2 - பி.எல்.சி. கலந்தாய்வுக் கூட்டம்!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., மன்னை த.சோழராஜன் சிறப்புரை!

மயிலாடுதுறை. ஜன.24

மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியம் தி.மு.க. பாக முகவர்கள் (பி.எல்.ஏ.2) மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி.) கலந்தாய்வு கூட்டம் சங்கரம்பந்தல் இலுப்பூரில ரமாட்டி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு செம்பனார்கோயில் தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.அப்துல்மாலிக் வரவேற்றார்.

சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம்.சித்திக், மாவட்ட துணைச் செயலாளர் மு.ஞானவேலன், செம்பனார்கோயில் வடக்கு ஒன்றியச் செயலாளர் பி.எம்.அன்பழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் தலைமை தாங்கி பேசினார்.

கூட்டத்தில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற தொகுதி பார்வையாளருமான மன்னை த.சோழராஜன் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்.

கூட்டத்தில் மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கே.விக்னேஷ், செம்பனார்கோயில் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் மாவட்ட பிரதிநிதிகள் ஈச்சங்குடி க.இளங்கோவன், கே.எஸ்.எஸ்.கருணாநிதி, கே.பி.ராஜா, ஒன்றியக் கழக துணைச் செயலாளர்கள் எஸ்.சிவக்குமார், கா.இளங்கோவன், செல்லம்மாள் பன்னீர்செல்வம், பொருளாளர் ஏ. ரெங்க ராஜ், மற்றும் ஒன்றிய, கிளைக் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

---






கலைஞர் என் காதலன்

நூல் வெளியீட்டு விழா

கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா

நாள் : 25-01-2025 சனிக்கிழமை,
நேரம் : காலை 10.00 மணியளவில்
இடம் : ஸ்ரீ அபிராமி மகால், திருவண்ணாமலை




அழைத்து மகிழும்
தமிழ்மாமணி, தமிழவேள்
புலவர் வெ. அனந்தசயனம்
எம்.கே. சாவடி (பட்டானூர்), வானூர் வட்டம்,
விழுப்புரம் மாவட்டம். செல் : 97895 43053


---

**கரூர் மாவட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி. பயிலும் 8105 மாணவ – மாணவியருக்கும்,**

# பிளஸ்2 பயிலும் 6656 மாணவ - மாணவியருக்கும் வினா - விடை வங்கி புத்தகங்கள்!

### அமைச்சர்கள் வி.செந்தில் பாலாஜி – டாக்டர் மா.மதிவேந்தன் முன்னிலையில் வழங்கினர்!

கரூர்.ஜன.24.

கரூர் மாவட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி. பயிலும் 8105 மாணவ மாணவியருக்கும், பிளஸ்2 பயிலும் 6656 மாணவ - மாணவியருக்கும் வினா - விடை வங்கி புத்தகங்கள் அமைச்சர்கள் வி. செந்தில் பாலாஜி - டாக்டர் மா.மதிவேந்தன் முன்னிலையில் வழங்கினர். மாணவ - மாணவியர் திராவிட மாடல் அரசை உளமார வாழ்த்தினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கல்வி என்பதே நம் பிள்ளைகளின் ஆயுதம், அந்த கல்வியே நம்மை காத்திடும் கேடயம் என, 'புதுமைப்பெண்', 'நான்முதல்வன்', 'தமிழ்ப்புதல்வன்' என பல திட்டங்கள் வழங்கி மாணவச் செல்வங்களில் கல்வித்தரத்தை உயர்த்தி வருகிறார்கள். இவ்வகையான திட்டங்களை வழங்கிவரும் முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துகளுடனும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், நமது நம்பிக்கை நாயகர் உதயநிதி ஸ்டாலின், அவர்களின் வாழ்த்துகளுடனும், கரூர் மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் 130 பள்ளிகளில், தமிழ் மற்றும் ஆங்கிலம் வழியில், 10ம் வகுப்பு பயிலும் 8105 மாணவ மாணவியர்களுக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் பாடங்களில் வினா- விடை வங்கி புத்தகங்கள், மற்றும் +2 பயிலும் 6656 மாணவ மாணவியர்களுக்கு தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், கணினி பயன்பாடுகள், கணினி அறிவியல், வரலாறு, உயிரியல், பொருளியல், வணிகவியல், கணக்குப் பதிவியல் முதலிய பாடங்களில் வினா - விடை வங்கி புத்தகங்களை இலவசமாக, மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன் முன்னிலையில் வழங்கினர்.

கரூர் பசுபதீஸ்வரர் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, நகர்மன்ற மேல்நிலைப்பள்ளி, அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிகளில் மாணாக்கர்களுக்கு புத்தகங்களை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி வழங்கி துவக்கி வைத்தார்.

உன்னத உள்ளம் கொண்ட திராவிட மாடல் அரசுக்கு மாணவ - மாணவியர் உளமார நன்றி மற்றும் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

---

**திருப்பூர் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட**

# சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைதளப் பயிற்சி!

### மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிவிப்பு!



திருப்பூர், ஜன.24-

திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்கவும் திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட தாராபுரம் (தனி), காங்கேயம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தி.மு.கழக இளைஞர் அணி சார்பில் 26.01.2025 ஞாயிறு அன்று சமூக வலைதள பயிற்சியாளர்களான டான் அசோக், விக்னேஷ் விஜய் ஆனந்த் ஆகியோர் கீழ்க் கண்ட பட்டியல்படி சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி அளிக்கின்றனர்.

எனவே, அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல் பங்கேற்குமாறு திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நாள் : 26.01.2025 (ஞாயிறு) - காலை 9.30 மணி - சட்டமன்ற தொகுதி : காங்கேயம், தாராபுரம் (தனி), இடம் : கோகுல் திருமண மண்டபம், தாராபுரம்.

நாள் : 26.01.2025 (ஞாயிறு) - மாலை 3.00 மணி - சட்டமன்ற தொகுதி : மடத்துக்குளம், உடுமலைப்பேட்டை, இடம் : ராசி திருமண மண்டபம், போடிப்பட்டி, உடுமலைப்பேட்டை

இவ்வாறு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் தெரிவித்துள்ளார்.

---



**தி.மு.க. இளைஞர் அணி**

கலைஞர் 100 1924 - 2023

**சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி**

**இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 5–இல், நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 26.01.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | 5 | காங்கேயம் | கோகுல் திருமண மண்டபம், தாராபுரம். |
| | | | தாராபுரம் | |
| | மாலை 3.00 மணி | | மடத்துக்குளம் | ராசி திருமண மண்டபம், போடிப்பட்டி, உடுமலைப்பேட்டை. |
| | | | உடுமலைப்பேட்டை | |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 22-01-2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி